අධ්‍යාපන, උසස් අධ්‍යාපන සහ වෘත්තීය අධ්‍යාපන අමාත්‍යාංශය 'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு 'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
Ministry of Education, Higher Education and Vocational Education 'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 +94112785818
info@moe.gov.lk www.moe.gov.lk

මගේ යොමුව / எனது இல. / My Ref. ED/1/1/5/1 ඔබේ යොමුව / உமது இல. / Your Ref. දිනය / திகதி / Date 2025.02. 18

**சுற்றுநிருப இலக்கம்: 09 / 2025**

சகல மாகாணக் கல்விச் செயலாளர்கள்,
சகல மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்,
சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள்,
சகல கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள்,
சகல பாடசாலை அதிபர்கள்.

**அகில இலங்கை பாடசாலை நாடகம் மற்றும் அரங்கக் கலைவிழா– 2025**

கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் ஏற்பாட்டில் வருடாந்தம் நடைபெறும் மேற்குறிப்பிட்ட விழாவின் 2025 ஆம் ஆண்டிற்கான நிபந்தனைகள், ஆலோசனைகள் மற்றும் சமர்ப்பிக்கவேண்டிய தலைப்புகள் கீழே காட்டப்பட்டிருக்கின்றன. இது தொடர்பாக குறிப்பிட்ட ஆசிரியர்கள் மற்றும் மாணவ/மாணவியருக்கு அறிவித்து இந்த விழாவில் அவர்களது படைப்புகளை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கும்படி அறியத்தருகின்றேன்.

இவை கீழ்க்கண்ட பிரகாரம் உள்ளன.

- பக்க இலக்கம் 03 முதல் 18 வரை சிங்களமொழிப் பிரிவு தொடர்பான தகவல்கள
- பக்க இலக்கம் 19 முதல் 32 வரைதமிழ் மொழிப் பிரிவு தொடர்பான தகவல்கள்

இதில் பங்குகொள்ளும் சகல போட்டியாளர்கள் மற்றும் ஏனைய பங்குபற்றுநர்கள் போட்டியின் சகல சந்தர்ப்பங்களிலும் இச் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள சகல நிபந்தனகளையும் பின்பற்றுவதற்குக் கட்டுப்பட்டுள்ளீர்கள்.

நாலக களுவெவ
செயலாளர்

ගරු අමාත්‍යතුමිය / கௌரவ அமைச்சர் / Hon. Minister
+94112784832
+94112784825
minister.education@moe.gov.lk
ලේකම් / செயலாளர் / Secretary
+94112784811
+94112785162
secretary.education@moe.gov.lk
moesecretaryoffice@gmail.com

# அகில இலங்கை பாடசாலை நாடகம் மற்றும் அரங்கக் கலை விழா 2025 (தமிழ் மொழி)

## அறிமுகம்

நாடகம் மற்றும் அரங்கக் கலை பாடம் தொடர்பான நடைமுறை மற்றும் பொருள்சார் அனுபவங்களை நாட்டின் பாடசாலை மாணவர்களுக்குப் பெற்றுக் கொடுப்பதும், மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களை வடிவமைப்பில் ஈடுபடுத்துவதும் அவர்களின் நாடக இரசணை திறமைகளை விருத்தி செய்து ஆக்கபூர்வமான சக்தியை விருத்தி செய்தல் ஆகிய நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு இவ்விழா ஒழுங்கு செய்யப்படுகிறது. பாடசாலைகளில் தற்போது அமுல்படுத்தப்பட்டுள்ள பாடவிதானத்தில் நாடகம் மற்றும் அரங்கக்கலைப் பாடம் தரம்-06 முதல் உயர்தரம் வரையும் உள்ளடக்கப் பட்டுள்ளமையினால் இவ் விழாவை ஒழுங்கு செய்வதன் மூலம் இப்பாட அபிவிருத்திக்காக அதிவிசேட பங்களிப்பு கிடைக்கும். மாணவர்கள் மத்தியில் சிறந்த சிந்தனையினை விருத்தி செய்து தேசத்தின் அபிவிருத்தியினை இலக்காகக் கொண்டு மாணவ மாணவியர்களின் ஆளுமையினை விருத்தி செய்வதற்காக இவ் விழா பங்களிப்புச் செய்கின்றது. இதன் மூலம் தேசிய மட்டத்திலான மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்பட்ட மாணவர்கள் உயர் கல்வியில் ஈடுபடும்பொழுது முன்னுரிமைக்கு உட்படுத்தப்படுகின்றனர்.

## விழா தொடர்பான பொதுவான சட்ட திட்டங்கள்

1. இவ்விழா தமிழ்மொழி மூலப் பிரிவில் கீழ்க்குறிப்பிடப்பட்டவாறு இரண்டு பிரிவுகளாக வகுக்கப்படுகின்றன.

- பிரிவு - A – **பரிந்துரைக்கப்பட்ட நாடகக் காட்சிகள்** (சமஸ்கிருத, கிரேக்க, ரோம் மற்றும் சேக்ஸ்பியர் நாடகங்கள் சார்ந்த நாடகக் காட்சிகளின் மீள் ஆக்கம் அல்லது வருடாந்தம் உள்ளடக்கக்கூடிய மற்றும் மறுசீரமைப்புக்கு வாய்ப்புகளுள்ள ஏனைய பிரிவுகள்)

- பிரிவு - B – **தனி மனித நடிப்பு** (Role Play) / **கதை சொல்லுதல்** (Story Telling ) (பரிந்துரை செய்யப்பட்ட / தேர்ந்தெடுக்கப்பட் நாடக நூல்களில் உரையாடல் பகுதி /உரையாடல் பகுதிகளை அல்லது கதை வசனத்தை நாடகரீதியில் சமர்ப்பித்தல் மற்றும் வருடாந்தம் உள்ளடக்கக்கூடிய அல்லது மறுசீரமைப்பிற்கு வாய்ப்புகளுள்ள ஏனைய பிரிவுகள்)

2. **நடிப்புப் பங்களிப்பிற்கமைய இவ்விழா கீழ்க் கண்டவாறு நடத்தப்படும்.**

- சிரேஷ்ட இடைநிலைப் பிரிவு - (10 - 13 வரையான தரங்களுக்காக)

2.1 A பிரிவின் மூலம் சமர்ப்பிக்கப்படும் நாடகத்தின் **வரிசையில் கோரப்பட்டுள்ள விசேட சந்தர்ப்பத்தின்போது** கீழ் வகுப்புகளில் ஒரு மாணவன் அல்லது பலரின் நடிப்பிற்காக அத்தியாவசிமாயின் முன்அனுமதியுடன் மாத்திரம் அவ்வாறு செய்ய முடியும். விண்ணப்பப்படிவம் அல்லது விண்ணப்பப்படிவத்துடன் நாடகத்தின் பிரதியினை அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கும் வேளையில் அக்கோரிக்கை எழுத்து மூலம் விண்ணப்பப்படிவத்துடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும். இக்கோரிக்கை ஆக்கத்தின் வெற்றிக்காக நியாயமானது என்ற மீளாய்வின் போது அடையாளம் காணும் பட்சத்தில் மாத்திரம் அதற்காக அனுமதி வழங்கப்படும்.

3. **இவ் விழாவின் தேசிய சுற்றில் நாடகம் மேடை ஏற்றுவதற்காக கீழ்க் குறிப்பிடப்பட்டவாறு இரண்டு கட்டங்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.**

- முதலாவது கட்டம் - (A பிரிவினருக்காக)
- இரண்டாவது கட்டம் - (B பிரிவினருக்காக)

4. பங்கேற்பு

4.1. அரசாங்க பாடசாலைகளின் மாணவர்கள், கல்வி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் பாடசாலைகளின் மாணவர்கள் மற்றும் ஆசிரியப் பெருமக்கள் இவ்விழாவில் பங்குபற்ற முடியும்.

4.2. நடகமும் அரங்கியலும் பாடத்தைக் கற்பிக்கும் பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் இவ்விழாவில் பங்குபற்றுவது **கண்டிப்பாக** எதிர்பார்க்கப்படுகிறது.

4.3. இவ்விழாவில் எந்த பாடசாலையிலிருந்தும் தரம் ஒன்றில் இருந்து தரம் பதின்மூன்று வரையான மாணவர்கள் பங்குபற்ற முடியும் என்பதோடு, அந்தப் பாடசாலை விழாவிற்கு விண்ணப்பிக்கும் வருடத்தில் அந்த பாடசாலையிலிருந்து இரண்டாவது முறையாக உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும மாணவர்கள் அந்த வருடத்தின் ஜுலை மாதம் 31ஆம திகதி வரை பங்குபற்ற முடியும்.

4.4. வேறு பாடசாலையின் ஆசிரியர் அல்லது மாணவர் அல்லாத வெளிக் கலைஞர்களை எச்சந்தர்ப்பத்திலும் நடிப்பதற்காக பங்கேற்கச் செய்யக்கூடாது என்பதுடன் முன்வரும் பாடசாலைகளுக்குரிய வேறு பாடசாலையின் ஆசிரியரை துணைக் கலைஞர் தேவைக்காக பங்குபற்றச் செய்யவேண்டியது முன்வரும் அந்தப் பாடசாலை அமைந்திருக்கும் பிரதேசத்திலிருந்து மட்டுமே. இக் கலைஞர் தேவைகளுக்கு ஏற்றவாறு முடியமானவரை பங்கேற்கும் பாடசாலையின் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கு பயிற்சிகளை மேற்கொள்வது பாடஅபிவிருத்திக்கு மிகமுக்கியத்துவம் வாய்ந்தது என்பது வலியுறுத்தப்படுகிறது.

4.5. தமது பாடசாலையை இவ் விழாவிற்கு பங்கேற்கச் செய்ய மற்றும் தேவையான சகல ஒத்துழைப்புக்களையும் வழங்குவது விடயத்திற்குப் பொறுப்பான ஆசிரியர்கள், அதிபர்களின் பொறுப்பு என்பதுடன், இவ் ஆலோசனைக் கோவை மற்றும் ஆண்டுக்குரிய சுற்றறிக்கை எல்லைகளின் கீழ் பாடசாலைகளுக்கு விரும்பிய தலைப்புக்களுக்கமைய விழாவுடன் இணைவதற்கு தமது மாகாணத்தில் மற்றும் வலயத்தின் பாடசாலைகளை ஊக்குவிப்பதற்கு உரியதாக மாகாண//கல்வி வலயத்தின் அழகியற் பிரிவு விடயத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தர்களின் பொறுப்பாகும்.

5. விண்ணப்பித்தல்

5.1 A பிரிவில் அதிகபட்சம் ஒரு தயாரிப்பும் அல்லது B பிரிவில் அதிகபட்சம் இரண்டு தயாரிப்பகளும் சமர்ப்பிக்க முடியுமென்பதோடு, A பிரிவில் பங்குபற்றாத பட்சத்தில் B பிரிவில் பங்குபற்ற முடியாது. (இவ்வாண்டில் ஆரம்பிக்கின்ற காரணத்தால் இந்த கட்டுப்பாடுகள்)

5.2. இங்கு A பிரிவிற்குரியதான ஏதேனும் நாடகத்தை சமர்ப்பிக்கும் பாடசாலை B பிரிவின் நடிப்புக்களம் மற்றும் கதை வசனங்களைச் சமர்ப்பிப்பது தொடர்பில் பிரிவின் நாடகத்தை தேர்ந்தெடுப்பது சார்ந்த தலைப்பில் பங்கேற்கும்போது அதற்காக A பிரிவில் தேர்ந்தெடுக்கப்பட்ட நாடகத்தையே தேர்தெடுக்க முடியாது.

**5.3. மேற்கூறப்பட்ட பங்கேற்பு எல்லைகளைத் தாண்டி விண்ணப்பப்படிவங்களைச் சமர்ப்பிப்பது விழாவை ஒழுங்கு செய்தல் மற்றும் நிருவாகப் பணிகளுக்கு தடை என்பதினால் இவ் எல்லைகளைக் கருத்திற் கொள்ளாது மற்றும் எல்லைகளைத் தாண்டி விண்ணப்பப்படிவங்களைச் சமர்ப்பிக்கும் பாடசாலைகள் விழாவில் எந்தவொரு தலைப்பிற்காகவும் பதிவு செய்யப்படமாட்டாது.**

5.4 விண்ணப்பிப்பதற்காக கீழ குறிப்பிடப்பட்டுள்ள இறுதித் தினத்தன்று அல்லது அதற்கு முன்னர் கல்வி அமைச்சிற்கு இதில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு முறையான விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பித்து பாடசாலையின் பெயர்ப்பட்டியல் www.moe.gov.lk எனும் கல்வி அமைச்சின் இணையத்தளத்தில் பகிரங்கப்படுத்தப்படும். இறுதித் தினத்திற்குப் பின்னர் கிடைக்கும் எந்தவொரு விண்ணப்பப்படிவமும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

5.5 விழாவிற்கு விண்ணப்பிக்கும் போது இதன் இறுதியில் இணைக்கப்பட்டுள்ள A என்ற பொது விண்ணப்பப்படிவத்தை மாத்திரம் பயன்படுத்த வேண்டும்.

**5.6 விண்ணப்பிக்கும் சகல தலைப்புக்களும்** மேற்கூறப்பட்ட A என்ற பொது விண்ணப்பப்படிவ மாதிரிப்படிவத்திற்கமைய A4 கடதாசியில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தில் பூரணப்படுத்தி சமர்ப்பிக்க வேண்டியதுடன் **அந்தந்த தலைப்புக்களுக்காக தனியான விண்ணப்பப்படிவத்தை அனுப்பக்கூடாது.**

5.7 விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்யும்போது தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் மிகத் தெளிவான எழுத்தில் நிரப்ப வேண்டும்.

5.8 மேற்கூறப்பட்ட கோரிக்கைப் படிவத்தை **2025.04.10** ஆம் திகதிக்கு முன்னர் கல்வி அமைச்சின் அழகியற் பிரிவிற்கு **பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும்**. இதன் பிரதியை தமது மாகாணத்தின் மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கு பதிவுத் தபாலில் **கண்டிப்பாக** அனுப்ப வேண்டியதுடன், விழாவிற்கு விண்ணப்பித்ததாகக் கருதப்படுவது கல்வி அமைச்சின் அழகியற் பிரிவு பணிப்பாளர் மற்றும் தங்களது மாகாணத்தின் கல்விப் பணிப்பாளர் ஆகிய இருவருக்கும் உரிய காலத்திற்குள் **பதிவுத் தபாலில்** விண்ணப்பித்தால் மட்டுமே. மாகாணக் கல்வித் திணைக்களத்திற்கு மற்றும் கல்வி அமைச்சிற்கு கிடைக்க வேண்டியது ஒரே தகவலாக இருக்க வேண்டும். அந்த ஆலோசனைகளுக்குப் புறம்பாக கிடைக்கும் விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

5.9 விழாவிற்குரிய சுற்றறிக்கைகள் கல்வி அமைச்சின் www.moe.gov.lk என்ற இணைய தளத்தில் பகிரங்கப்படுத்தப்படுவதுடன் சகல மாகாண, வலய அலுவலகங்களுக்கு அச்சிடப்பட்ட பிரதிகள் அனுப்பப்படும். அது வெளியிடப்பட்டவுடன், உரிய மாகாண மற்றும் வலய அழகியற் பாடத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தர்கள் இச்சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆலோசனைகளுக்கமைய தமது மாகாணத்தின் /வலயத்தின் பாடசாலைகளுக்கு விண்ணப்பிப்பதற்குத் தேவையான அபிவிருத்தி வேலைத்திட்டங்களை முன்னெடுத்து அவர்களை திசைமுகப்படுத்த எதிர்பார்க்கப்படுகின்றது.

5.10 தமது வலயத்தின்/மாகாணத்தின் பாடசாலைகள் இதற்காக விண்ணப்பிக்கும் முன்னேற்றங்கள் நாளாந்த அடிப்படையில் ஆய்விற்குட்படுத்தி உரிய உத்தியோகத்தர்களுக்குத் தேவையான செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு வசதி ஏற்படும் வகையில் கல்வி அமைச்சிற்கு கிடைக்கும் சரியான விண்ணப்பப்படிவங்களின் பிரதி மின்னஞ்சல் மூலம் உரிய மாகாணக் கல்வித் திணைக்களத்திற்கு அனுப்பப்படுகின்றது.

5.11 மேலும் கல்வி அமைச்சிற்கு விண்ணப்பப்படிவங்கள் அனுப்பும் பாடசாலைகளின் பெயர் மாத்திரம் நாளாந்த அடிப்படையில் கல்வி அமைச்சின் இணையத்தளத்தில் பகிரங்கப்படுத்தப்படும். இவ் விண்ணப்பப்படிவங்களின் உண்மைத் தன்மை ஆய்விற்குட்படுத்தப்பட்டதன் பின்னர் இறுதிப் பட்டியல் பகிரங்கப்படுத்தப்படும்.

5.12 பங்கேற்கும் மாணவ மாணவிகளின் பெயர் கொண்ட விளக்கமான தகவல்கள் உரிய மாகாண அல்லது அகில இலங்கை மட்டத்தில் முன்னர் பணிக்கப்படும் சந்தர்ப்பத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். அவ்வாறு பணிக்கப்படும் சந்தர்ப்பத்தில் விளக்கமான தகவல்களைச் சமர்ப்பிக்காத பாடசாலைகளுக்கு உரிய மதிப்பீட்டு சுற்றுக்கு தோற்ற முடியாது.

5.13 பின்னர் விளக்கமான தகவல்களைச் சமர்ப்பிக்கும் போது **பெயர்களின் முதலெழுத்தினை ஆங்கில மொழியில் எழுதப்பட வேணடும்.**

5.14 விண்ணப்பப்படிவங்களை அனுப்பவேண்டிய முகவரி :

Director (Aesthetic Education)
Aesthetic Education Unit,
Ministry of Education, Higher Education and Vocational Education.
'Isurupaya' Battaramulla.

**முக்கியமாக கவனிக்கவும்**
முகவரி ஆங்கிலத்திலேயே எழுதப்பட வேண்டும். அத்தோடு கடித உறையின் இடது பக்க மேல மூலையில் 'All Island School Drama and Theatre Festival – 2025 (Tamil Medium)

5.15 B பிரிவின் தலைப்பிற்குரியவாறு தேர்ந்தெடுக்கப்பட்ட நாடகப் பகுதிகள் தொடர்பில் சுமார் 100 சொற்களில் சுருக்கமாக தமது விண்ணப்பப்படிவத்துடன் அனுப்ப வேண்டும்.

5.16 கல்வி அமைச்சின் அல்லது ஏனைய நிறுவனங்களின் நாடக விழாவிற்கு அல்லது போட்டிகளுக்கு இதற்கு முன்னர் சமர்ப்பித்த நாடக ஆக்கங்கள் அல்லது ஆக்கங்களின் பகுதிகளை இதற்காகச் சமர்ப்பிக்கக்கூடாது.

5.17 மேற்கூறப்பட்ட நிபந்தனைகளுக்குப் புறம்பாக அல்லது அதனைக் கருத்திற் கொள்ளாது விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பது உரிய கல்லூரி நிபந்தனைகளைக் கருத்திக் கொள்ளவில்லை எனக் கருதி நிராகரிக்கப்படும்.

**6. விழா நிகழ்வுகள்**

6.1. இவ் விழா இரண்டு வாய்ப்புகளை உள்ளடக்கி இருக்கும்.

- **மாகாண விழா** - A பிரிவில் மற்றும் B பிரிவிற்கு சமர்ப்பிக்கும் உரிய மாகாணப் பாடசாலைகளின் பிரதிநிதித்துவம்.

- **தேசிய விழா** -மாகாணச் சுற்றில் முதலாம் இடத்தைப் பெற்ற அல்லது நேரடியாகவே இறுதிச் சுற்றுக்கு அழைக்கப்பட்ட பாடசாலையை பிரதிநிதித்துவப்படுத்தல்.

  A பிரிவில் அந்தந்த நாடகத் தலைப்புகளுக்கிடையில் கலைத்துவமான மற்றும் தரமான உயரிய மட்டத்தில் காணப்படுவதாக நடுவர்களின் விசேட பரிந்துரைக்கமைய ஒரு தலைப்பின் மூலம் தேர்ந்தெடுக்கப்படும்.

  B பிரிவில் அகில இலங்கை ரீதியில் பங்களிப்பு குறையும் பட்சத்தில் நேரடியாகவே தேசிய விழாலவில் இணைத்துக்கொள்ளப்படுவார்கள்.

6.2. ஏதேனும் ஒரு நாடகத் தலைப்பிற்காக விண்ணப்பித்துள்ள நிலைமைக்கமைய அத்தலைப்பு அல்லது பல தலைப்புகளுக்காக அண்மித்த இரு மாகாணங்கள் அல்லது பல மாகாண மதிப்பீட்டினை ஒரே இடத்தில் மேடை ஏற்றி தனித்தனியாக மாகாண அடிப்படை மதிப்பீடுகளுக்குட்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

6.3. மாகாண விழா உரிய மாகாணத்திற்குப் பொறுப்பான மாகாணக் கல்விப் பணிப்பாளர் மற்றும் நிரல் அமைச்சின் அழகியற் பிரிவு பணிப்பாளரினால் கூட்டாக இணைந்து ஒழுங்கு செய்ய வேண்டியதுடன் மாகாணப் பணிப்பாளருக்கு உதவுவது மாகாண அழகியல் அல்லது நாடகம் மற்றும் அரங்கக் கலை பாடவிதானத்திற்குப் பொறுப்பான பணிப்பாளரின் பொறுப்பாகும்.

6.4. மாகாண விழாவில் பங்கேற்கும் மாணவர்கள் அத்தலைப்புக்களில் அகில இலங்கை மட்டத்திற்கு தோற்றுவது கட்டாயமாகும். அது தொடர்பில் தவிர்க்க முடியாத பிரச்சினைகள் மாகாண விழா மட்டத்தில் எழும் பட்சத்தில் அந்நிபந்தனைகள் இரத்துச் செய்யப்படாத வகையில் மாகாணக் கல்விப் பணிப்பாளரினதும், அகில இலங்கை மட்டத்தில் இந்த் அமைச்சின் செயலாளரினதும் ஆலோசனைகள் உட்பட எழுத்து மூல அங்கீகாரதினால் மாத்திரம் அப்பிரச்சினைகளைத் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

6.5. தேசிய விழா தொடர்பாக பின்னர் அறிவிக்கப்படும்.

6.6. சகல விழாக்களிலும் மாணவர்கள் தோற்ற வேண்டியது விழாவில் பங்கேற்கும் பாடசாலை அதிபரின் அங்கீகாரத்திற்கு அமைய மாத்திரம் என்பதுடன் வேறு

பாடசாலைகளின் மாணவர்களை இணைத்துக்கொள்வதாயிருந்தாலும் பாடசாலை அதிபரின் அனுமதி பெறப்படவேண்டும்.

6.7. ஒருவராக, இருவராக அல்லது குழுவாக பங்கேற்கும் மாணவன், மாணவி அல்லது அப்பிரிவின் தங்களுக்கு பயிற்றுவிப்பதற்கு பங்களிப்பு வழங்கிய ஆசிரியரை உடைய பாடசாலையில் மாகாண மட்டத்தில் தோற்றி அகில இலங்கை மட்டத்திற்கு தகைமைகளை பெற்றுள்ள சந்தர்ப்பத்தில் அகில இலங்கை விழா நடாத்துவதற்கு முன்னர் அம் மாணவர், மாணவி அல்லது ஆசிரியர் வேறு பாடசாலையில் சேருவதற்கு அல்லது இடமாற்றம் பெறக்கூடிய நிலை ஏற்பட்டால் இவ் ஆண்டுக்காக மாத்திரம் தாம் முதலில் மாகாண மட்டத்தில் தோற்றிய பாடசாலையைப் பிரதிநிதித்துவப்படுத்த வாய்ப்பு வழங்கப்பட வேண்டும்.

6.8. எவரேனும் ஒரு மாணவர் அல்லது மாணவி இறுதிச் சுற்று நடைபெறும் வேளையில் பாடசாலையிலிருந்து விலகி பாடசாலைக் கல்வியினை கைவிட்டிருக்கும் வேளையில் ஒற்றையர் பிரிவில் பெயரிட்ட மாகாணத்தில் இரண்டாம் இடத்தைப் பெற்ற மாணவருக்கு பங்குபற்றுவதற்கான வாய்ப்பு உரித்தாகுவதுடன் குழுப் பிரிவினராயின் அப்பாடசாலையின் ஏனைய பதிலீட்டு மாணவர் அல்லது மாணவியினைப் பயன்படுத்த உரிய கல்லூரிக்கு வாய்ப்பு வழங்கப்படும். இதற்குரிய தகவல்களை எழுத்து மூலம் உறுதிப்படுத்த வேண்டும்.

## 7. நாடக வகை மற்றும் உள்ளடக்கம்

7.1. இப் போட்டிக்குத் தயாரிக்கப்படும் மற்றும் ஆக்கப்படும் நடனத் கருப்பொருள் கதை/ பாடல் வரிகள்/ வசனம்/ நாடகங்கள் என்பன இன, மத, சாதி பேதங்கள் மற்றும் ஏனைய சமூகத்திற்கு எதிரான நோக்கங்களுக்கு இடமளிக்கக்கூடிய வகையிலான கருத்துக்களை உள்ளடக்கியதாக அமையக்கூடாது என்பதுடன், அவ்வாறான கருத்துகள் தொணிக்குமாறு வரைவிலக்கணப்படுத்தக்கூடாது. மேலும் தான் சார்ந்த அல்லது பிரதிநிதித்துவப்படுத்தக்கூடிய இனம், சமயம், கலாசாரம் மற்றும் அரசியல் கொள்கைகள் காரணமாக எவையேனும் சமூகப் பிரிவிற்கு சிரமங்கள் ஏற்படக்கூடிய வகையிலான கருத்துகளை உங்களது ஆக்கங்களில் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

7.2. சகல ஆக்கங்களும் பாடசாலை மாணவர்களுக்குப் பொருத்தமான பாடசாலை முறைமையில் அங்கீகரிக்கப்பட்ட பெறுமதி மற்றும் பொறுத்தமானவாறு இருக்க வேண்டியதுடன் பாதகமான மொழிப் பயன்பாடுகள் அற்றதாக இருக்க வேண்டும். 02 பிரிவில் தலைப்புகளுக்குரியதாக தேர்ந்தெடுக்கும் போது மேற்கூறப்பட்ட விடயங்கள் தொடர்பில் கூடுதலாக கவனம் செலுத்தவேண்டி இருக்கும்..

## 8. மதிப்பீடு

8.1 மாகாணச் சுற்றி மற்றும் அகில இலங்கை விழா ஆகிய மட்டங்களில் நாடக மதிப்பீடுகளுக்காக மேற்பார்வை சபை இலங்கை கலைக் கழகத்தின் அரச உப நாடக சபையினால் பரிந்துரை செய்யப்பட்ட நிபுனத்துவ வளவாளர்கள் கொண்ட குழாமிலிருந்து கல்வி அமைச்சினால் நியமிக்கப்படும்.

8.2 நாடகத் தயாரிப்பின் போதான மேற்பார்வை என்பது ஒரு ஆக்கத்திற்குள் உள்ளடங்கும் ஒவ்வொன்றுக்கும் மாற்றமாக சுமார் 10 துறைகளை விசேடமாக கருத்திற் கொண்டு மதிப்பீட்டுக்குட்படுத்துவது சிரமமான செயற்பாடு என்பதினால் இவ்விழாவில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மதிப்பீட்டு சபை மற்றும் மதிப்பீட்டுச் செயற்பாடுகள் கணித// புள்ளி விபர அடைவு மட்டங்களை அடிப்படையாகக் கொள்ள மாட்டாது. மதிப்பீட்டுத் துறை தொடர்பான தேவைகளை அடிப்படையாகக் கொண்ட தேசிய சுற்றில் குறைந்தபட்சம் மூன்று உயர்ந்தபட்சம் ஆறு என்பதுடன் எண்ணிக்கையைக் கொண்ட மதிப்பீட்டு சபை நியமிக்கப்படுவதுடன் ஏதேனும் தலைப்பிற்கு நியமிக்கப்படும் மதிப்பீட்டு சபை அந்தந்த மதிப்பீட்டுத் துறை தொடர்பில் பரஸ்பர இணக்கத்திற்கமைய வழங்கப்படும் மதிப்பீடுகள் மாத்திரம் இறுதித் தெரிவிற்காக கல்வி அமைச்சினால் ஏற்றுக்கொள்ளப்படும்.

8.3 கோளமய அடிப்படையில் நாட்டின் நாடகக் கலையின் பாடப் பரவலாக்கலுக்கமைய மற்றும் அரசாங்கத்தினால் நடாத்தப்படும் ஏனைய சகல பிரதான விளையாட்டு விழாக்கள் உட்பட போட்டிகளில் பின்பற்றக்கூடிய செயற்பாடுகளுக்கமைய இவ்விழாவின் போது மாகாண மதிப்பீடுகள் பொதுவான மதிப்பீட்டு சபையினால் மேற்கொள்ளப்படும். மாகாண மதிப்பீட்டுக்குட்படுத்தப்படும் A மற்றும் B பிரிவின் சகல ஆக்கங்களும் அவற்றின் பண்புசார் தர மட்டத்திற்கமைய கீழ்க்குறிப்பிட்டவாறு தரப்படுத்தப்பட்டுள்ளன.

A தரம் - சிறந்த தயாரிப்பாகும்
B தரம் - சாதாரண மட்டத்திலான தயாரிப்பாகும்
C தரம் - வலுவற்ற தயாரிப்பாகும்

8.4 மாகாண மட்ட போட்டிகளின்போது ஒப்பனை, ஆடை அலங்காரம் மற்றும் மேடையமைப்பு ஆகியன தொடர்புபட்ட துறைகள் மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்படமாட்டாது. தேசிய விழாவிற்கு தேர்ந்தெடுக்கப்படும் அல்லது சமர்ப்பிக்கப்படும் நாடகங்களை அதற்குச் சமர்ப்பிக்கும் போது ஆக்கத்துக்குரியதான துணைப் பிரிவுகளை பயன்படுத்த வேண்டும்.

8.5 இவ் விழாவில் ஒருசில ஆக்கங்களுக்காகத் தேவையாயின் ஒலிப்பதிவு செய்யப்பட்ட இசையை மற்றும் ஒலிச்சேர்க்கைகளை பயன்படுத்த வாய்ப்பளிக்கப்படும். இருப்பினும் இச் சங்கீத ஒலிக் கலப்பு பாகங்களுக்காக நாடகங்கள் மேடையேற்றும் மண்டபங்களின் மின் விநியோகத்தின் மூலம் மின்சாரத்தை வழங்க விழாவின் ஏற்பாட்டாளர்ளுக்கு பொறுப்புகள் இல்லை என்பதினால் உரிய பாடசாலையினால் பொருத்தமான மார்க்கச் செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டிவரும்.

8.6 நாடகத்தில் தீப் பயன்பாடுகள் தடை செய்யப்பட்டுள்ளதுடன் மேடையை ஒளியூட்டுவதற்காக மேடை ஒளியமைப்பு உபகரணங்களை கொண்டு வந்து பொருத்துதல் அல்லது புகை வெளியிடும் இயந்திரங்களைப் பயன்படுத்துவது முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது.

8.7 தேசிய சுற்றில் காட்சிகளைப் பொருத்துதல் மற்றும் பொருத்தப்பட்டுள்ள பின்னணியினை அகற்றும் செயற்பாடுகளை 10 நிமிடங்களுக்குள் மேற்கொள்ள வேண்டும். எவையேனும் தலைப்பில் முதலில் முன்வரும் பாடசாலை பின்னணியினைப் பொருத்த வேண்டியது நடுவர் சபை ஆசனங்களின் அமர்ந்ததன் பின்னர் அவர்களின் முன்னிலையிலாகும்.

8.8 இச் சகல சந்தர்ப்பங்களிலும் பிரதான திரையினை திறந்து வைத்து மதிப்பீட்டு சபைக்கு மற்றும் ஏனைய சகலருக்கும் தென்படக்கூடியவாறு பின்னணியினை பொருத்த மற்றும் அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். வழங்கப்பட்டுள்ள கால எல்லைக்குள் இலகுவில் பொருத்தக்கூடிய வகையிலும் பாதுகாப்பாக நாடகத்திற்குள் பயன்படுத்தக்கூடிய வகையிலும் இறுதியில் துரிதகதியில் கழற்றி அகற்றக்கூடிய வகையிலும் காட்சிகளை வகுக்கும் ஆக்கங்களை மேற்கொள்ளும் பொறுப்பு உரிய கல்லூரிக்குரியதாகும். உரிய கால எல்லைக்குள் அகற்றப்படாத மற்றும் பொருத்தப்படாத பின்னணிகள் காடசியமைப்பு மதிப்பீட்டிலிருந்து அகற்றப்படும்.

8.9 விழாவின் எந்த சந்தர்ப்பத்திலும் சமர்ப்பிக்கப்படும் நாடகங்களை மதிப்பீட்டுக்குட்படுத்தும் போது மூன்றாவது பிரிவின் தலைப்புக்களுக்காக அன்றி ஏனைய சகல தலைப்புகளுக்குமுரிய நாடகங்கள் மேடையேற்றுமதல் செயற்பாடுகள் கண்டிப்பாக மேற்கொள்ள வேண்டியது, நாடகம் மேடை ஏற்றுவதற்காக பொருத்தமான ''புறோசீனியம்'' மேடை கொண்ட அரங்கத்தில் மட்டுமே.

8.10 எந்தவொரு விழா சந்தர்ப்பத்திலும் ஒன்றை விடக் கூடுதலான மதிப்பீட்டு சபை எண்ணிக்கை நாடக மதிப்பீடுகளை மேற்கொள்வதாயின் அம்மதிப்பீட்டு சபைகளின் அமைவிடம் மற்றும் உரிய சபைகளுக்கு சமர்ப்பிக்கப்படும் தலைப்புக்கள் தொடர்பிலான தகவல்களை உள்ளடக்கிய நேர அட்டவணையினை ஒத்தி வைப்பதற்குரியதாக பாடசாலைகளுக்கு கட்டாயமாக வழங்க வேண்டும்.

8.11 எந்தவொரு தலைப்பிற்காகவும் சமமான இடங்கள் வழங்கப்படமாட்டாது. முதலாம் இடத்திற்கு மற்றும் ஜுரியின் பரிந்துரைக்கு மேலதிக மாகாணத்தில் ஏதேனும்

தலைப்பிற்கு மேலதிகமாக நாடகம் அகில இலங்கை மட்டத்திற்கு தேர்ந்தெடுக்கப்படமாட்டாது.

8.12 தேவையான செயல்திறன் மட்டத்தை எட்டப்படவில்லை என மதிப்பீட்டு சபையினால் தீர்மானிக்கப்படும் நாடகம் அல்லது நாடக அம்சங்களை மாகாண மட்டத்திலிருந்து தேசிய மட்டத்திற்கு அல்லது தேசிய மட்டததிற்கு தேர்ந்தெடுக்கப்பமாட்டாது.

8.13 இங்கு தலைப்பின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளில் உள்ள நேரத்திற்கு பங்கேற்கக் கூடியவர்களின் எண்ணிக்கை மற்றும் பங்கேற்கக்கூடிய தரத்தின் வகைகளுக்குட்பட்ட நிபந்தனைகளில் ஒன்று அல்லது பல விழாவின் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மீறப்படும் சந்தர்ப்பத்தில் அத் தவறுக்காக பிள்ளைகளினால் நட்டஈடு செலுத்த இடமளிக்கப்படமாட்டாது. தமது ஆக்கம், சுற்றறிக்கைகளுக்கமைய சமர்ப்பிக்கப்படும் ஆக்கத்திற்கு பங்களிப்பு செய்வது ஆசிரியர்களின் கூட்டுப் பொறுப்பு என்பதனால் உரிய தலைப்புகள் அக்கல்லூரியினைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சகல ஆசிரியர்களின் சான்றிதழ் உரிமை இரத்துச் செய்யப்படும்.

8.14 மேற்கூறப்பட்ட விடயங்களுக்குரியதாக ஏதேனும் மோசடிச் செயற்பாடுகள் இடம்பெற்றதாக விழாவில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அல்லது விழாவிற்குப் பின்னர் தெரியவரும் பட்சத்தில் பொறுப்பு வாய்ந்த ஆசிரியர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொண்டு எதிர்காலத்தில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பாடசாலை முறைமையினை பிரதிநிதித்துவப்படுத்தி எந்தவொரு விழாவிலும் அல்லது போட்டியிலும் நாடகங்களை சமர்ப்பிக்கும் உரிமையினை இரத்துச் செய்தல் உட்பட பரிந்துரை செய்யப்பட்ட ஒழுக்காற்று நடவடிக்கைகள் செயல்ப்படுத்தப்படும்.

8.15 நேர அட்டவணையில் தமக்குரிய நேரத்திற்கு முன்னர் உரிய நடுவர் சபை, அமைந்துள்ள கல்லூரிக்கு வருகைதந்து தயாராகி, நேர அட்டவணைக்கமைய ஏற்பாட்டு சபையினால் தமது ஆக்கங்களை மேடையேற்ற அழைப்பதற்கு முன்னர் பதிவு செய்து கொள்வது உரிய கல்லூரியின் பொறுப்பாகும். நேர அட்டவணைக்கமைய தமது கல்லூரிக்குரியதாக வழங்கப்பட்டுள்ள நேரத்திற்குள் சபைக்கு அறிக்கை சமர்ப்பிக்காத எந்தவொரு பாடசாலையும் விழாவில் பங்கேற்காததாக கருதி செயற்பாடுகள் மேற்கொள்ளப்படும்.

8.16 தேசிய சுற்றுக்காக பங்கேற்கும் பாடசாலைகளுக்கு கல்வி அமைச்சினால் தங்குமிட வசதிகள் வழங்கப்படமாட்டாது. தங்குமிட வசதிகள் தேவைப்படும் பாடசாலைகளின் வசதி கருதி அவ் வசதிகளை பெற்றுக் கொள்ளக்கூடிய பாடசாலைகள் தொடர்பான தகவல்களை பெற்றுத்தருதல் மாத்திரம் செய்யப்படும்.

8.17 தேசிய மற்றும் மாகாண முடிவுகள் உரிய சுற்று நடாத்தப்படும் தினத்திலேயே வெளியிடப்படும்.

## 9. ஒழுக்கம்

9.1 பங்குபற்றும் இடங்களுக்கு அழைத்துவரும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் குழந்தைகளின் பாதுகாப்பு, நடத்தை, ஒழுக்கம் மற்றும் பாதுகாப்பு தொடர்பாக பாடசாலை அதிபரிகளின் மற்றும் குழுவுக்குப் பொறுப்பான ஆசிரியர்களின் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

9.2 மாணவர்களை கவனமாய் பார்த்துக்கொள்ளும் பொறுப்பு ஆசிரியர்களுக்கும், மாணவியரைப் கவனமாய் பார்த்துக்கொள்ளும் பொறுப்பு ஆசிரியைகளுக்கும் உரிய கடமையாகும்.

9.3 ஏதாவதொரு சட்டவிரோத சம்பவம் நிகழ்ந்தால் அதற்கான பொறுப்பு பாதுகாப்பாளர்களை சார்ந்ததே. விழா மற்றும் விழா தொடர்பான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பெற்றோரை பங்குபற்ற வைக்கக்கூடாது.

9.4 இந்த விழாவிற்காக விண்ணப்பித்து கலந்துகொள்ளும் எல்லா பாடசாலைகள் மற்றும் மற்றைய குறப்பிட்ட பங்குதாரர்கள் விழாவின் எந்த சந்தர்ப்பத்திலும் இங்கு குறிப்பிட்டுள்ள எல்லாவிதமான சட்ட திட்டங்கள் மற்றும் நடைமுறைகள் கண்டிப்பாக

பின்பற்றுவதற்கு கடமைப்பட்டிருக்கிறீர்கள் என்பதோடு, நடுவர்களின் முடிவுகளை எந்தவதக் நிபந்தனைகளுமின்றி ஏற்றுக்கொள்வதற்கு கட்டுப்பட்டுள்ளீர்கள் என்பதை கவனத்தில் கொள்ளவும்.

9.5 ஒரு பாடசாலை விண்ணப்பத்திரம் அனுப்பும்பொழுதே தீர்ப்பை ஏற்றுக்கொள்வதற்கு உடன்பட்டுள்ளீர்கள் என்பதனால் தீர்ப்பு தொடர்பாக முறைப்பாடுகள் செய்ய முடியாது என்பதோடு அவை ஏற்றுக்கொள்ளப்படவும் மாட்டாது.

9.6 ஏற்பாட்டு காரியங்களில் தடை ஏற்படும் வகையில் அல்லது வேறு தகுதியற்ற நடவடிக்கைகள் மேற்கொண்டு செயல்ப்பவர்கள் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் ஆக இருந்தால் சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்படும்.

9.7 இந்த விழாவில் எந்த சந்தர்ப்பத்திலும் பாடசாலை நடவடிக்கைகளை கல்வி அமைச்சின் அனுமதியின்றி எந்தவொரு ஊடகவியலாளரையோ அல்லது படப்பிடிப்பாளரையோ அழைத்துவந்து செயல்ப்படுத்துவது தடை செய்யப்பட்டுள்ளது.

9.8 கல்வி அமைச்சின் கடமையான இந்த விழாவில் எல்லா சந்தர்ப்பத்திலும் ஒரு பாடசாலை சார்பாக பரிவர்த்தனைகள் மேற்கொள்ளப்படவேண்டியது பாடசரலை அதிபரும், மாகாண கல்வி இயக்குனரும் கல்வி அமைச்சின் செயலாளர் சார்பாக அழகியல் இயக்குனருக்கு இடையில் மட்டுமே. தங்கள் பாடசாலையின் வேறு நிலையிலுள்ளவர்களை இந்த பரிவர்த்தனைகளுக்காக ஈடுபடுத்தக் கூடாது என்பதோடு, கல்வி முறைமைகளில் வெளியாரை ஈடுபடுத்தாமல் இருக்கும் உரிமை நேரடியாகவே பாடசாலை அதிபருக்குரிய கடமையாகும்.

9.9 தேசிய விழாக் கட்டங்களின் நேர அட்டவணையினை பெற்றுக்கொடுத்தல் ஆரம்ப ஆலோசனைக் கூட்டத்தில் இது மேற்கொள்ளப்படுவதினால் அதில் பங்கேற்க வேண்டியது கட்டாயமாகும். அக்கூட்டத்தில் இறுதிச் சுற்றுக்கு பங்கேற்க முன்னர் வழங்கப்படும் ''பாடசாலை அதிபர் விசேட அறிக்கை'' எனும் மாதிரிப் படிவத்தில் பூர்த்தி செய்து அதிபரின் கையொப்பத்துடன் நாடகத்தைச் சமர்ப்பிக்கும் சந்தர்ப்பத்தில் வழங்காத பாடசாலைகளுக்கு நாடகத்தை மேடையேற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

9.10 ஒரு பாடசாலைக்கு இந்த அறிவுரைகளை பரிசீலனை செய்ய முடியாமல் போவது அல்லது பரிசீலிக்காமல் இருப்பது தப்புவற்கான காரணம் அல்ல. இதனால் குழந்தைகளுக்கு ஏற்படக்கூடிய பாதிப்புகள், கவனமின்மையினால் அல்லது பொறுப்பற்ற தன்மைகளின் வெகுமதியாகக் கருதி குறிப்பிட்ட பகுதியினருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும்.

## 10. அடையாளத்தை உறுதிப் படுத்துதல்

10.1 அடையாளத்தை உறுதிப் படுத்துவதற்கு அவசியமான வேளையில் பங்குபற்றுபவர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய அடையாள அட்டையை சமர்ப்பிப்பதற்கு, எல்லா சந்தர்ப்பத்திலும் தயாரயக இருக்க வேண்டும்.

10.2 ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்காக மட்டும் பாடசாலை அதிபர் அத்தாட்சிப்படுத்திய மாணவர்களின் பெயர்ப்பட்டியல் அடையாளத்தை உறுதி செய்யும் அத்தாட்சியாக ஏற்றுக்கொள்ளப்படும்.

10.3 தேசிய அடையாளஅட்டை தபால் அடையாளஅட்டை இல்லாத மாணவர்களின் கையெழுத்துடன் கூடிய குறிப்பிட்ட பாடசாலை அதிபரினால் கையொப்பம் இடப்பட்டு குறிப்பிட்ட பிரிவின் கல்வி இயக்குனர் அல்லது மண்டல அழகியல் அல்லது வேறு விடய இயக்குனரொருவர் மூலம் அத்தாட்சிப்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.

10.4 அடையாளத்தை உறுதி செய்ய இயலாமல் போகும் பட்சத்தில் விழாவிலிருந்து நீக்க வேண்டிய நிலை ஏற்படும்.

## 11. திறமை விருது மற்றும் சான்றிதழ்கள் வழங்குதல்.

11.1 மாகாண மட்டத்தில் வெற்றியீட்டும் மாணவர்களுக்கு சான்றிதழ்களை வழங்கும் வேலைத்திட்டங்கள் மாகாண மட்டத்தில் மேற்கொள்ளப்பட வேண்டும். தேசிய மட்டத்திலான வெற்றியாளர்களுக்காக கல்வி அமைச்சினால் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

11.2 அந்தந்த தலைப்புக்களில் விசேட நிலைமைகளுக்கமைய உரியவாறு கீழ்க் குறிப்பிட்ட பிரிவுகளுக்காக சான்றிதழ்கள் வழங்கப்படும்.

- சிறந்த தயாரிப்பு 1ஆம், 2ஆம் மற்றும் 3 ஆம் இடங்கள் (A பிரிவிற்காக)
- சிறந்த இயக்கம் (A பிரிவிற்காக)
- சிறந்த நடிப்பாற்றலை வெளிப்படுத்திய மாணவன் 1ஆம், 2ஆம் மற்றும் 3ஆம் இடங்கள் (A பிரிவிற்காக)
- சிறந்த நடிப்பாற்றலை வெளிப்படுத்திய மாணவி 1ஆம், 2ஆம் மற்றும் 3ஆம் இடங்கள் (A பிரிவிற்காக)
- சிறந்த ஒப்பனை (A பிரிவிற்காக)
- சிறந்த ஆடையமைப்பு (A பிரிவிற்காக)
- சிறந்த காட்சியமைப்பு (A பிரிவிற்காக)
- சிறந்த இசையமைப்பு (A பிரிவிற்காக)
- சிறந்த நயன பயிற்சி (A பிரிவிற்காக)
- சிறந்த மண்டப நிருவாகம் (A பிரிவிற்காக)
- சிறந்த பாத்திரப் படைப்பு (Role Play) / கதை சொல்லுதல் (Story Telling) 1ஆம், 2ஆம் மற்றும் 3ஆம் இடம் (B பிரிவிற்காக)
- நடுவர் சபையின் விசேட திறமை மதிப்பீடுகள்

11.3. சிறந்த நடிப்பை வெள்ப்படுத்திய மாணவன் அல்லது ஆணவியைத் தேர்ந்தெடுக்கும் அடிப்படையாவது நடிப்பில் ஆண் / பெண் தன்மை அல்ல. நடிகரின்/நடிகையின் ஆண்மை/பெண்மை தன்மையாகும்.

அகில இலங்கை பாடசாலை நாடகம் மற்றும் அரங்கக் கலை விழா பற்றி இங்கு குற்ப்பிட்டுள்ள விடயங்கள் தொடர்பான இறுதித் தீர்மானம் கல்விச் செயலாளருக்கு உரியதாகும்.

# விழா தலைப்புகள் மற்றும் தலைப்பு இலக்கங்கள்

## Categoy A – பரிந்துரைக்கப்பட்ட நாடகக் காட்சிகள்

A. சமஸ்கிருதம், கிறேக்க-ரோம மற்றும் ஷேக்ஸ்பியரது நாடகங்கள் சம்பந்தப்பட்ட சம்பவ பிரதிபலிப்புகள

**TA.1 சிரேஷ்ட இரண்டாவது பிரிவு சமஸ்கிருத நாடகம்**

- இப்பொழுது தமிழ் மொழி பெயர்ப்புகளாக வெளியாகியுள்ள, ஏதாவதொரு சமஸ்கிருத நாடகத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு பகுதி பிரதிபலித்தல் இங்கு எதிர்பார்க்கப்படுகிறது.
- நேரடி இசை மட்டுமே பாவிகப்பட வேண்டும்
- தேர்ந்தெடுக்கப்படும் நாடகம், இப்பொழுது தமிழ் மொழியில் தயாரிக்கப்பட்டிருந்தால், இசை புதிதாக உருவாக்கப்படுவதோடு பாடல்களின்
- மெட்டுகள் சுதந்திரமான புதிய படைப்புகளாக இருக்க வேண்டும்.

**TA.2 சிரேஷ்ட இரண்டாவது பிரிவு கிறேக்க மற்றும் ரோம நாடகங்கள்**

- எந்த ஒரு கிறேக்க மற்றும் ரோம நாடகத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு பகுதி நடித்துக் காட்டப்படுவது இங்கு எதிர்பார்க்கப்படுகிறது.
- ஒலிப்பதிவு செய்யப்பட்ட இசை மற்றும் ஒலிக்குறியீடுகள் பாவிப்பதற்கு தடை இல்லை.

**TA.3 சிரேஷ்ட இரண்டாவது பிரிவு ஷேக்பியர் நாடகம்**

- விலியம் ஷேக்ஸ்பியரது **தி டெம்பஸ்ட்** நாடகத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு பகுதி நடித்துக்காட்டப்படுவது இங்கு எதிர்பார்க்கப்படுகிறது.
- ஒலிப்பதிவு செய்யப்பட்ட இசை மற்றும் ஒலிக்குறியீடுகள் பாவிப்பதற்கு தடை இல்லை.

**மேற்சொன்ன தலைப்பு இலக்கங்கள் T.A.1, T.A.2, T.A.3 தொடர்பான பொது நிபந்தனைகள்**

- 10ஆம் தரத்தில் இருந்து 13ஆம் தர மாணவர்களுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட வேண்டும்.
- படைப்பாக்கத்தில் பங்குபற்றக்கூடிய மாணவர்களின் மொத்த எண்ணிக்கை (நடிப்பு உட்பட) 15 ஐ விட மேற்படலாகாது
- கால எல்லை அதிகபட்சம் 15 நிமிடங்களுக்குள் இருக்க வேண்டும்.
- குறிப்பிட்ட நாடக வரிசைக்கேற்ப நடிப்பில் பங்குபற்றக்கூடியவர்களின் எண்ணிக்கை தீர்மானித்துக்கொள்ள முடியும்.
- தேர்ந்தெடுக்கப்பட்ட நாடகப்பகுதி, மூலப்பிரதியோடு ஒத்திருக்க வேண்டியதோடு, எந்த விதத்திலும் நாடக தொகுப்பு மாற்றுதல் அல்லது சிதைத்து விடுதல் செய்யக்கூடாது.
- மூலப்பிரதியில் உள்ள விடயங்கள் தொடர்பாக சேதங்கள் ஏற்படா வண்ணம் கையாள வேண்டும்.

## Category B – பாத்திர நடிப்பு மற்றும் கதை சொல்லுதல்

### B. பாத்திர நடிப்பு / கதை சொல்லுதல் சமர்ப்பித்தல்

வாய்வழி அபிநயத்தின் மூலம் நடிப்புத் திறமையை மதிப்பீடு செய்தல் இங்கு முதன்மைக் குறிக்கோளாவதோடு இந்த பிரிவில் தனி நபர் நடிப்பின்போது குறிப்பிட்ட தலைப்பிற்கு பரிந்துரைக்கப்பட்ட நாடகத்தின் ஒரு பாத்திரத்தின் தனி நபர் நடிப்பு (Monologue) ஒரு பகுதி, சுய நடிப்பு (Soliloguy) ஒரு பகுதி அல்லது பல பாத்திரங்களின் கலந்துரையாடல்களுக்கிடையில் உள்ள ஒப்பீடுகளை குறுகிய அல்லது நீண்ட மொழி நடையில் ஒரு பகுதியை நடிப்பின் மூலம் சமர்ப்பித்தல் எதிர்பார்ப்பாகும்.

கதை சொல்லும்போது உள்நாட்டு வெளிநாட்டு மக்கள் கதைகள், தேவதைக் கதைகள், உவமைக் கதைகள், அல்லது வேறு பொருத்தமான தனி நபர் நடிப்பில் நாடகரீதியாக சமர்ப்பித்தல் எதிர்பார்க்கப்படுகிறது. இருவர் தங்கள் படைப்புகளை சமர்ப்பிக்கும்போது பரிந்துரைக்கபட்ட நாடகத்தின் இரண்டு பாத்திரங்களுக்கிடையில் விரிவான கலந்துரையாடலின் ஒரு பகுதியை நடிப்பின் மூலம் வெளிப்படுத்த வேண்டும்.

### TB.1 சிரேஷ்ட இரண்டாவது பிரிவு: குழு கதை சொல்லுதல் நாடக ரீதியில் முன்வைத்தல் (Story Telling)

- தனக்கு விருப்பமான உள்நாட்டு வெளிநாட்டு மக்கள் கதை தேவதைக் கதை, உவமைக் கதை, அல்லது வேறு பொருத்தமான தற்கால கதை, அதிலுள்ள பாத்திரங்கள், ஒரு சந்தர்ப்பத்தை நாடக ரீதியில் வெளிப்படும் விதத்தில் ஆற்றலை வெளிப்படுத்த வேண்டும்.
- உபகரணங்கள், ஆடைகள் முதலியன பாவிப்பதற்கு இடம் இருப்பதோடு தளம் என்ற வகையில் ஒரு மேசை, ஒரு நாற்காலி போன்ற எளிய மற்றும் அத்தியாவசியமான அமைப்புகளை மட்டும் பாவிப்பதற்கு இடமுண்டு.
- பெண்கள்/ஆண்கள் என்ற ரீதியில் வேறுபாடு இல்லை.
- அதிகபட்ச நேரம் 8 நிமிடங்கள். குறைந்தபட்ச நேரம் 5 நிமிடங்களாகும்.
- அதிகபட்சம் 5 பேர் பங்குபற்ற முடியும்.
- ஆற்றுகையானது மூன்றாம் நிலை நபர் பேசும் அடிப்படையில் இருத்தல் வேண்டும்.
- சமர்ப்பிப்பவர்கள் 5 பேரளவில் கையாளக்கூடிய வகையில் இசை/ஒலிச் சேர்க்கையாளர்களுக்கும் இடமுண்டு. இங்கு பொம்மைகளை (பப்பட்ஸ்) பாவிப்பதற்கும் சுதந்திரம் உண்டு.
- நுண்கலை போட்டிகள் பற்றி சொல்லப்பட்ட பொது ஆலோசனைகளில் நாடகம் மற்றும் அரங்கக் கலை விழாவிற்கு ஏற்ற ஒவ்வொரு நிபந்தனையிலும் குற்பிட்டுள்ள தரநிலைகளுக்கு இணங்கி இருக்க வேண்டும்.

### TB.2 சிரேஷ்ட இரண்டாவது பிரிவு: வாய்மொழி தனிநபர் நடிப்பு– 12-13 தரங்கள்) (Role Play)

- பரிந்துரைக்கப்பட்ட நாடகம்: ஜூலியஸ் சீசர் (விலியம் ஷேகஸ்பியர்)
- பெண் / ஆண் என்ற ரீதியல் தரம் பிரிக்கப்பட மாட்டாது.

### TB.3 சிரேஷ்ட இரண்டாவது பிரிவு: இருவர் (10 – 13 தரங்கள்)

- பரிந்துரைக்கப்பட்ட நாடகங்கள்: விளையாட்டு வீடு, **ஜூலியஸ் சீசர்** (விலியம் ஷேக்ஸ்பியர்)

**மேல் குறிப்பிட்டுள்ளபடி T.B.2, T.B.3 எனும் தலைப்புகள் தொடர்பாக பொது நிபந்தனைகள்**

- காலம் 03 முதல் 05 நிமிடங்களுக்குள் இருக்க வேண்டும்
- மூலப்பிரதிக்கு சேதம் ஏற்படுத்தக்கூடாது என்பதோடு மூலப்பிரதியில் மாற்றமும் செய்யக்கூடாது.
- மூலப்பிரதியின் அர்த்தம் பிரதிபலிக்கும் வண்ணம் நேர்மறையான விளக்கவுரைகளுக்கான சுதந்திரம் உண்டு.
- தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதியை ஞாபகத்திலிருத்தி பிழையின்றி சமர்ப்பிக்க வேண்டும். தனி நபர் தலைப்பில் மதிப்பீடு செய்யும்போது நடிப்பின் தரம் பற்றி முதன்மையாக கவனத்தில் கொள்வதோடு, சமர்ப்பிப்பதற்காக செலவிடும் நேரமும் மேலதிகமாக கவனத்தில் கொள்ளப்படும்.
- தொகுப்பை ஞாபகப்படுத்துவதற்கு சந்தர்ப்பம் கிடைக்காது.
- தலைப்பில் தரப்படும் கால எல்லை மீறும் பட்சத்தில் நடுவர் சபையால் இடைநிறுத்த முடியும்.
- அனைத்து குழந்தைகளும் கறுப்பு டீ சர்ட் மற்றும் நீளமான கால்சட்டைளுடன் தங்களை அலங்கரித்துக்கொண்டு படைப்பை சமர்ப்பிப்பதோடு பாத்திரத்திற்கு உகந்த ஆடைஅணிகளை பாவிக்கக்கூடாது.
- நடிப்பின்போது அத்தியாவசியமாய் பாவிக்க வேண்டிய நிலை ஏற்படின் உபகரணத்தை அல்லது எளிய பின்னணியை (உதாரணமாக ஒரு மேசை, ஒரு நாற்காலி) தவிர்த்து வேறு எதையும் பாவிக்கக் கூடாது.
- பின்னணி இசை அல்லது ஒலி பாவிக்கக் கூடாது.
- புாடல்கள் சேர்த்துக்கொள்ளக் கூடாது.
- ஜோடியாக இணைந்து சமர்ப்பிக்கும்போது தனி அலகாக மதிப்பீடு செய்த போதிலும் இருவரின் பங்களிப்பும் தன்த்தனியாக மதிப்பீட்டிற்கு ஆளாக்கப்பட மாட்டாது.
- இருவரின் கலந்துரையாடலுக்காக தேர்ந்தெடுக்கப்படும் உரையாடல் / பகுதிகள் இருவருக்கிடையில் சமமாகப் பிரிந்திருக்க வேண்டிய அவசியம் இல்லை.

கல்வி அமைச்சின் நுண்கலைப் பிரிவின் ஏற்பாட்டில்

**அகில இலங்கை பாடசாலை நாடகம் மற்றும் அரங்கக் கலை விழா -2025**

பொது விண்ணப்பப் படிவம் – **படிவம் A**

1. பாடசாலையின் பெயர் :-
2. பாடசாலையின் மாகாணம் மற்றும் கல்வி மண்டலம் :-
3. தற்பொழுது பாடசாலை மாணவர்களின் எண்ணிக்கை :-
4. பாடசாலையின் முகவரி மற்றும் தொலைபேசி இல. :-

**(முக்கிய கவனத்திற்கு: இத்துடன் இணைக்கப்பட்டுள்ள ஆங்கில படிவத்தையும் நிரப்பி அனுப்பவும்)**

பிரிவு A பிரிவுகளில் பரிந்துரைக்கப்பட்ட நாடகக் காட்சி தயாரிப்புகள் தொடர்பாக :

| பிரிவு A | நாடகத்தின் பெயர் | தலைப்பு | சமர்ப்பிக்கும ஆசிரியரின்/ இயக்குனரின் பெயர் | கையொப்பம் | கைத் தொலைபேசி இலக்கம் |
|---|---|---|---|---|---|
| T.A.1<br>T.A.2<br>T.A.3 | | | | | |
| | | | நாடகத்தின் பெயர்: | | |
| | | | | | |
| | | | நாடகத்தின் பெயர்: | | |

பிரிவு A **பாத்திர நடிப்பு தொடர்பாக:**

(மேலுள்ள பிரிவு A சார்பாக சமர்ப்பித்தால் மட்டுமே இந்த பிரிவில சமர்ப்பிக்க முடியும்)

| பிரிவு B | நாடகத்தின் பெயர் | தலைப்பு | சமர்ப்பிக்கும ஆசிரியரின் பெயர் | கையொப்பம் | கைத் தொலைபேசி இலக்கம் |
|---|---|---|---|---|---|
| T.B.1<br>T.B.2<br>T.B.3 | | | | | |
| | | | | | |

அகில இலங்கை பாடசாலை நாடகம் மற்றும் அரங்கக் கலை விழா தொடர்பாக குறிப்பிட்ட சுற்றறிக்கையை நான் உட்பட இதில் பங்கேற்கும் மேலை கையொப்பமிட்டுள்ள ஆசிரியப் பெருமக்களால் தனிப்பட்ட ரீதியில் வாசித்து புரிந்துகொண்டாதகவும் அதன்படி நமது பாடசாலை, மேற்குறிப்பிட்ட தலைப்புகளில் விண்ணப்பிக்க தகுதி பெறுவதாகவும், இந்த சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ள அனைத்து சட்ட திட்டங்கள் மற்றும் விதிகளை கண்டிப்பாக பின்பற்ற உடன்படுவதாகவும், மத்தியஸ்தர் சபையின் எந்தவிதத் தீர்ப்பையும் ஏற்றுக்கொள்ள உடன்படுவதாகவும் இதன் மூலம் உறுதி செய்கிறேன். எல்லா சந்தர்ப்பத்திலும் எனது பாடசாலையின் மாணவ/ மாணவியர் மற்றும் ஆசிரியப் பெருமக்கள் ஒழுங்குமுறையாக நடந்துகொள்ள வேண்டியதற்கான பொறுப்பை தனிப்பட்ட ரீதியில் நான் ஏற்றுக்கொள்வதாக உறுதி செய்கிறேன்.

...................................................

பாடசாலை அதிபரின கையொப்பம்

பெயர் :

திகதி :

காரியாலய முத்திரை

கல்வி அமைச்சின் நுண்கலைப் பிரிவின் ஏற்பாட்டில்

## அகில இலங்கை பாடசாலை நாடகம் மற்றும் அரங்கக் கலை விழா -2025

பொது விண்ணப்பப் படிவம் – **(படிவம் A)**

1. Name of the School:-
2. Zone of the School:-
3. Province of the School :-
4. Address and the Telephone number of the School :-

பிரிவு A **பிரிவுகளில் பரிந்துரைக்கப்பட்ட நாடகக் காட்சி தயாரிப்புகள் தொடர்பாக :**

<table>
<tr><th>Category A</th><th>Item No.</th><th>Name of the Item</th><th>Name of the Teacher / Director</th><th>Signature</th><th>Mobile T.P Number</th></tr>
<tr><td rowspan="4">T.A.1<br>T.A.2<br>T.A.3</td><td rowspan="2"></td><td rowspan="2"></td><td></td><td></td><td></td></tr>
<tr><td colspan="3">Name of the Drama</td></tr>
<tr><td rowspan="2"></td><td rowspan="2"></td><td></td><td></td><td></td></tr>
<tr><td colspan="3">Name of the Drama</td></tr>
</table>

பிரிவு A **பாத்திர நடிப்பு தொடர்பாக:**

(மேலுள்ள பிரிவு A சார்பாக சமர்ப்பித்தால் மட்டுமே இந்த பிரிவில சமர்ப்பிக்க முடியும்)

<table>
<tr><th>Category B</th><th>Item No.</th><th>Name of the Item</th><th>Name of the Teacher / Director</th><th>Signature</th><th>Mobile T.P Number</th></tr>
<tr><td rowspan="2">T.B.1<br>T.B.2<br>T.B.3</td><td></td><td></td><td></td><td></td><td></td></tr>
<tr><td></td><td></td><td></td><td></td><td></td></tr>
</table>

அகில இலங்கை பாடசாலை நாடகம் மற்றும் அரங்கக் கலை விழா தொடர்பாக குறிப்பிட்ட சுற்றறிக்கையை நான் உட்பட இதில் பங்கேற்கும் மேலை கையொப்பமிட்டுள்ள ஆசிரியப் பெருமக்களால் தனிப்பட்ட ரீதியில் வாசித்து புரிந்துகொண்டாதகவும் அதன்படி நமது பாடசாலை, மேற்குறிப்பிட்ட தலைப்புகளில் விண்ணப்பிக்க தகுதி பெறுவதாகவும், இந்த சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ள அனைத்து சட்ட திட்டங்கள் மற்றும் விதிகளை கண்டிப்பாக பின்பற்ற உடன்படுவதாகவும், மத்தியஸ்தர் சபையின் எந்தவிதத் தீர்ப்பையும் ஏற்றுக்கொள்ள உடன்படுவதாகவும் இதன் மூலம் உறுதி செய்கிறேன். எல்லா சந்தர்ப்பத்திலும் எனது பாடசாலையின் மாணவ/ மாணவியர் மற்றும் ஆசிரியப் பெருமக்கள் ஒழுங்குமுறையாக நடந்துகொள்ள வேண்டியதற்கான பொறுப்பை தனிப்பட்ட ரீதியில் நான் ஏற்றுக்கொள்வதாக உறுதி செய்கிறேன்.

..................................................

பாடசாலை அதிபரின கையொப்பம்

பெயர் :

திகதி :

காரியாலய முத்திரை